# திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை: டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப.,

ந.க.அ1/1361/2018

நாள்: 26.12.2021

பொருள்: கருணை அடிப்படையில் பணி நியமனம் - திருவள்ளூர் மாவட்டம் - கும்மிடிப்பூண்டி வட்டம் - வேற்காடு கிராம உதவியாளராக பணிபுரிந்து பணியிடையே 02.12.2017 அன்று காலமான திரு.ராதா என்பவரின் மகன் திரு.ஆர்.புருஷோத்தமன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் வழங்கியது - இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 07.01.2019 முற்பகல் வரன்முறை செய்து உத்திரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:

1. திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ1/1361/2018 நாள் 04.01.2019.
2. அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ-1)த்துறை நாள் 26.02.2021.
3. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாக ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கடித எண். ஆ.கு.3/18395/2020, நாள் 01.11.2021 மற்றும் 22.11.2021.

*****

**ஆணை:-**

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், வேற்காடு கிராம உதவியாளராக பணிபுரிந்து 02.12.2017 அன்று பணியிடையே காலமான திரு.ராதா என்பவரின் மகன் திரு.ஆர்.புருஷோத்தமன் என்பவருக்கு பார்வை 1-ல் கண்ட செயல்முறைகளின்படி திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு தனியர் 07.01.2019 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார்.

2) பார்வை 2-ல் கண்டுள்ள அரசாணையின்படியும், பார்வை 3-ல் கண்டுள்ள வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறும், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்த வித விதித்தளர்வும் தேவைப்படாத பணியாளரின் பணியினை, பணிநியமன அலுவலருக்கு ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலரால் வரன்முறை செய்யப்பட வேண்டும்.

3) எனவே, திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, தற்போது பொன்னேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திரு.ஆர்.புருஷோத்தமன் என்பவர் பணியில் சேர்ந்த நாளான 07.01.2019 முற்பகல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து உத்திரவிடப்படுகிறது.

ஒம்/-ஆல்பி ஜான் வர்கீஸ்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவள்ளூர்.

/உத்திரவின்படி/

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்

திரு.ஆர்.புருஷோத்தமன்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பொன்னேரி.
நகல்

1. வட்டாட்சியர் - பொன்னேரி - தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டு அதன் நகலினை உடன் இவ்வலுவலகம் அனுப்ப வேண்டியது.
2. வருவாய் கோட்டாட்சியர், பொன்னேரி.
3. கூடுதல் தலைமைச்செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5 - அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. இருப்புக்கோப்பு அ1 இருக்கை.